# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 29, 2025

Weekly E-paper ● November 29, 2025


# கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்

சுப. வீரபாண்டியன்



## ஒரு தீர்க்கதரிசியின் கனவு!

- தென்பாண்டியன்

## வாழ்க உதயநிதி!

தலையங்கம்

## உடல் மறைந்தது! கவிதையில் வாழ்கிறார்!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 29, 2025

Weekly E-paper ● November 29, 2025


# கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்

சுப. வீரபாண்டியன்

மழை - இயற்கையின் கொடை! ஆனால் அதே நேரத்தில், அளவு கடந்து பெய்யும் மழை, இயற்கைப் பேரழிவாக ஆகிவிடுகிறது!

நான்கு ஐந்து நாள்களுக்கு முன்பிருந்தே, வானிலை மையம் திரும்பத் திரும்ப எச்சரித்துக் கொண்டிருக்கிறது! இந்த வார இறுதியில் டித்வா புயல் காரணமாக, மிகக் கனமழை பெய்திட இருக்கிறதாம்! தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வியாழன் மாலையே அரசு அதிகாரிகள் அனைவரையும் கூட்டி, தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லியிருக்கிறார்.

மாவட்டம் தொடங்கி, ஒன்றியம், ஊராட்சி வரை உள்ள திமுகவினருக்கும் மக்களுக்கு உதவ அணியமாக இருங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளார்!





ஏற்கனவே இலங்கை - குறிப்பாகக் கொழும்பு நகரம் வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அங்கே மனிதர்கள் இறந்து கொண்டிருப்பதாகவும், விலங்குகள், பறவைகள் பெரும் துயருக்கு உள்ளாகி இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. எந்த நாடு, எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் எல்லோரும் மனிதர்கள், உயிரினங்கள் என்னும் அடிப்படையில், அவர்களைக் கருத்தில் கொண்டும் கவலை ஏற்படுகிறது.




இலங்கை ஒரு சின்னஞ் சிறிய நாடு. போராலும், இன அழிப்பினாலும் ஏற்கனவே அந்த நாடு பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இப்போது இயற்கையின் சீற்றமும் அவர்களை அல்லலுக்கு உள்ளாக்கி இருக்கிறது!

இன்னும் இரண்டு நாள்களில், தமிழ்நாடு மற்றும் ஆந்திராவின் கரையோரப் பகுதிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாக இருக்கின்றனவோ என்கிற அச்சமும் ஏற்படுகிறது.

2000 ஆண்டுகளுக்கு முன்பே, நம் வள்ளுவன் மிகச்சரியாகச் சொல்லி இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டி உள்ளது!

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"**

என்பது எவ்வளவு பெரிய உண்மை!

"மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்" என்பதும் நம் சிலம்பின் வரி. மழையைப் போற்றுவோம், வெள்ளம் வரும்போது அரசோடு சேர்ந்து நின்று, நாமும் நம்மால் இயன்றதைச் செய்வோம் !

ஆம், எப்போதும் இயன்றதைச் செய்வோம், இடைவிடாது செய்வோம்! ●

# ஒரு தீர்க்கதரிசியின் கனவு!

இன்னும் ஆரேழு மாதங்களில் முதலமைச்சராக முடிசூடிவிட வேண்டும் என்று ஏகப்பட்ட கனவுகளில் இருக்கிறார், ஒரு 'தீர்க்கதரிசி'. அவர் காஞ்சிபுரத்திற்குப் போய் தான் ஆட்சிக்கு வந்தால் செய்வதாகக் கூறிக் கொடுத்திருக்கும் வாக்குறுதிகள் ஆஹா... மகா தீர்க்கதரிசனம்!

எல்லோருக்கும் நிரந்தரமான வீடு இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மோட்டார் சைக்கிள், கண்டிப்பாகக் காரும் இருக்க வேண்டும். சரி! அப்படியானால் இப்பொழுதென்ன வீடு இல்லாமல், மோட்டார் சைக்கிள் இல்லாமலா மக்கள் சாலையில் திரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கேட்டுவிடாதீர்கள்,தீர்க்கதரிசி கோபித்துக் கொள்வார்.

திமுகழக ஆட்சியில் கலைஞர் உருவாக்கிய குடிசை மாற்றுவாரியம், சமத்துவபுரங்கள் வழியாக, இன்று கலைஞரின் கனவு இல்லத் திட்டம் வரையும் ஒரு லட்சம் வீடுகளும், கிராமப்புற ஏழை மக்களுக்காக 'சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்' என்று நடைபெற்றுக் கொண்டு இருக்கும் சிறப்பான திட்டங்களை அவருடன் இருக்கும் ஞானசூனியங்கள் யாரும் சொல்லவில்லையோ, இந்த தீர்க்கதரிசிக்கு? அதுமட்டுமல்ல மோட்டார்சைக்கிள் இல்லாத வீடுகளே இன்று இல்லை. அதிலும் கிராமங்களில் எல்லாம் அவை புல்லுகட்டு கொண்டு செல்லும் அளவுக்குப் புழக்கத்திற்கு வந்துவிட்டது. அத்துடன் நடுத்தர மக்கள் வீடுவரை காரும் வந்துவிட்டது. இது கூடத் தெரியாமலா இருக்கிறார், அந்த வருங்கால முதலமைச்சர்?

ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் டிகிரி படித்திருக்க வேண்டும், வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும், கல்விப் பாடத்திட்டத்தில் சீர்திருத்தம், அதுமட்டுமல்ல அரசு மருத்துவமனைகளுக்கு பயமில்லாமல் மக்கள் சென்று வர வேண்டும், என்று திருவாய் மலர்ந்திருக்கிறார். அடடே! என்ன தீர்க்க தரிசனமான வார்த்தைகள்?

முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி, 38 மாதிரிப்பள்ளிகள், தகைசால் கல்வி, உயர் தொழில்நுட்ப ஆய்வகம், குழந்தைகளுக்குக் காலை, மாலை உணவுத்திட்டம் என அவர். ஆற்றியுள்ள கல்விப்பணியும், அதனால் கல்வியின் தரம் இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடுதான் முதல் இடத்தில் இருக்கிறது என்று ஒன்றிய அறிக்கையில் சொல்லி இருக்கிறதே!

வருங்கால 'ஆச்சரியக் குறி' முதலமைச்சரான அந்த தீர்க்கதரிசி, கோடியில் ஒரு வார்த்தை போல, மக்கள் பயமில்லாமல் அரசு மருத்துவ மனைகளுக்குச் செல்லவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். இப்பொழுது என்ன மக்கள் பயந்து, பயந்து, முக்காடு போட்டுக்கொண்டு, இருட்டுப்பட்ட பின்னர் ஒவ்வொருவராக மக்கள் மருத்துவ மனைகளுக்குள் நுழைகிறார்களா என்று நீங்கள் கேள்வி கேட்கப்படாது!

அதுதான் சமூக ஊடகங்கள் தற்குறி, தற்குறி என்று கிழித்துக் கொண்டு இருக்கின்றனவே. ஆனாலும் ஏதோ திமுகதான் அப்படிச் சொல்வதாகச் சொல்லி, ஒரு ஆச்சரியக் குறியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் அந்த தீர்க்கதரிசி. திமுகவுக்கு இதுதான் வேலையா? எந்தப் பைத்தியமாவது தன்னைப் பைத்தியம் என்று சொல்லுமா? இதுவும் அப்படித்தான் போலத் தெரிகிறது!

எல்லாம் 'தாமரை'யின் அஜெண்டா.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்பார் பெரும் புலவர் திருவள்ளுவர்.

இது அரசியலுக்கும் பொருந்தும். அரிச்சுவடி கூடத் தெரியாமல் முதல்வராகும் சினிமாக் கனவுகளுக்குப் பொருந்தாது.

**- தென்பாண்டியன்**

# த.வெ.கவுக்குள் செங்கோட்டையன்



எடப்பாடி பழனிச்சாமியால் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன் அடுத்தசில நாள்களில் சந்தித்த முதல் மனிதர் பாஜகவின் உள்துறை அமைச்சர் அமித்ஷாதான், டில்லியில். சென்னை திரும்பிய அவர் அதிமுகவை ஒன்றிணைக்க வேண்டும் என்று எடப்பாடிக்குக் காலக்கெடு வைத்தார், எடப்பாடி அசையவில்லை. பின்னர் முதுகுளத்தூர் நிகழ்ச்சி ஒன்றில் செங்கோட்டையன், ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் இருவரையும் சந்தித்தார். சசிகலாவையும் சேர்த்துக் கட்சியை ஒன்றுசேர்ப்போம் என்று ஆர்ப்பாட்டமாகச் சொன்னார், திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் விஜய் தொடங்கியுள்ள தவெக என்ற ரசிகர் கட்சியில் சேர்ந்துவிட்டர்.

ஐம்பது ஆண்டுகால அரசியல் அனுபவம், ஒன்பதுமுறை சட்டமன்ற உறுப்பினர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோருடன் இணைந்து அரசியல் செய்தவர், முன்னாள் அமைச்சராக இருந்த செங்கோட்டையன், தன் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகிய சில மணிநேரத்தில் தவெகவின் தலைவர் விஜயைச் சந்தித்தார்; மறுநாள், அக்கட்சியில் இணைந்து விட்டார். நீண்ட அரசியல் அனுபவமிக்கவர், எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோருடன் இணைந்து அரசியல் செய்தவர் நேற்று உருவான

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!
கருஞ்சட்டைத் தமிழர்

## வாழ்க உதயநிதி!

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்ற குறளுக்கு நல்ல எடுத்துக்காட்டாய் விளங்கிக் கொண்டு இருக்கிறார் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அவருக்கு மென்மையான உள்ளம், ஆனால் துணிச்சலான கொள்கைப் பிடிப்பாளர். மார்க்சிஸ்ட் கட்சியின் மாநாடு ஒன்றில்

"சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியமாகும்" என்று பேசினார்.

இந்தத் துணிச்சலான கொள்கைப் பிடிப்புமிக்க பேச்சு வட இந்தியக் காவிகளின் காதுகளில் நெருப்பாகத் தெறித்தது. இந்திய ஒன்றியம் முழுவதும் பேசப்படும் தலைவராக்கி விட்டது ஒரே நாளில் இப்பேச்சு.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது ஒரு செங்கலைத் தூக்கிப் பிடித்து மக்கள் மத்தியில் சென்று பாஜகவைக் கதிகலக்கியது இவரின் தேர்தல் அரசியல். தலைவர் கலைஞர் அவர்களின் சாணக்கியத்தை இவரிடம் பார்க்கலாம்.

திமுகழக இளைஞர் அணியில் தொடங்கிய இவரின் அரசியல் பயணம், இன்று துணை முதலமைச்சர் வரை வந்துவிட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் தன் வாழ்த்துச் செய்தியில் "கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்! இளைஞரணி செயலாளராக, விளையாட்டுத் துறை அமைச்சராக, துணை முதல் அமைச்சராக நீ ஆற்றிவரும் பணிகளை மக்களும் கழகத்தினரும் பாராட்டிச் சொல்வதைக் கேட்கும்போது தந்தையாக மட்டுமல்ல தலைவனாக மகிழ்ச்சி அடைகிறேன்!" என்று உள்ளம் பூரித்துச் சொல்கிறார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

அவர்தான் தந்தை ஸ்டாலின். நாமும் நம் வாழ்த்துகளைத் தெரிவிப்போம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

தவெகாவில் இணைந்து, அரசியல் அரிச்சுவடி கூடத் தெரியாத நடிகர் விஜயைத் தலைவராக ஏற்கிறார் என்றால் இதன் பின்னணியில் ஏதோ ஒன்று இருக்க வேண்டும்!

அண்மையில் ஊடகவியலாளர் செந்தில் அவர்கள் ஒரு காணொளியில் பேசியிருந்தார். அதில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களின் ஒன்றிய அமைச்சர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் இல்லாமல் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களுக்கு வந்து செல்கிறார்கள், அந்தப்புள்ளிகள் அங்குள்ள வடமாநிலத் தொழிலாளர்களை அரங்கக் கூட்டங்களில் சந்தித்துப் பேசுகிறார்கள். வடமாநிலத் தொழிலாளர்கள் குடும்பத்தினர் ஒரு கோடிக்கு மேல் இருப்பார்கள், அவர்கள் தமிழ்நாட்டின் வாக்காளர்களாக ஆக்கப்படுவார்கள் என்று ஊடகவியலாளர் செந்தில் பேசியிருக்கிறார் அக்காணொலியில்.

இன்னொருபுறம் SIR என்ற வாக்காளர் சீர்திருத்தப் பட்டியல் என்று 30 நாள்களில் 6-7 கோடி மக்களின் வாக்குரிமையை சரிபார்க்கிறார்களாம். இப்படித்தான் பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டு பாஜக ஆட்சிக்கு வந்தது.

இவைகளை எல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்தால், விஜய், தவெக, செங்கோட்டையன் பின்னால் பாஜகவின் நிழல் தெரிகிறது.

பாஜகவுக்குச் சாதகமாக செங்கோட்டையன் மூலம் விஜயை வழிநடத்தி திமுகவுக்கு எதிரான அரசியலை, சினிமா நாயகர் என்ற மாயையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் 'அசைன்மெண்ட்' கொடுக்கப்படலாம்.

பாஜக அட்சியை தமிழ்நாட்டில் கொண்டு வரத் துடிக்கும் காவிகளின் அரசியல் சதுரங்கக் காய்களில் ஒருவரே செங்கோட்டையன்.

- எழில்

# உடல் மறைந்தது! கவிதையில் வாழ்கிறார்!

**வெற்றிச்செல்வன்**

”ஒட்டுமொத்தமாகவும் வரலாற்று ரீதியாகவும் பார்க்குமிடத்து, பாரதிதாசனுடைய சமூகக் கவிமரபிலே நமது கவிஞர் ஈரோடு தமிழன்பன் நடந்து வந்திருக்கிறார்” என்கிறார் ஆய்வாளர் கைலாசபதி. பாரதிதாசன் உருவாக்கிய பாட்டுப் பரம்பரையில் வானம்பாடியாய் வந்தவர்தான் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.



கவிஞருக்குப் பேரவையின் தோழர்கள் இறுதி மரியாதை

சமகால பண்பாட்டு, அரசியல், சமூகச் சூழலைத் தனது கவிதைகள் மூலம் உயிர்ப்பித்தவர் தமிழன்பன். ஈரோடு சென்னிமலையில் பிறந்த தமிழன்பன், மாணவப் பருவத்திலேயே ‘சுயசிந்தனை’ என்னும் பெயரிலான கையெழுத்து இதழை நடத்தியவர். அவரது முதல் நூலான ‘நெஞ்சின் நிழல்’ நாவலை பாரி நிலையம் மூலம் வெளியிடுவதற்குத் துணைநின்றவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

தனது வாழ்நாள் முழுவதும் ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவான குரலை ஒலித்து வந்தவர் தன்னுடைய குரலைக் கடந்த நவம்பர் 29 அன்று நிறுத்திக் கொண்டார். தமிழ், தமிழர், திருக்குறள், பெரியார், ஈழம் தொடங்கி உலக நாடுகள் நடத்துகிற போர்கள் வரை தனது பாடுபொருள்களில் அமைத்துக் கொண்டவர் தமிழன்பன். தமிழர் உயர வேண்டுமென்பது அவர்தம் உள்ளக்கிடக்கை. “நம் அஞ்சாம் வகுப்பு அய்யாசமிகள் ஐன்ஸ்டீன்களாக வேண்டாமா?” என்பது தமிழர் முன்னேற்றம் விரும்புகின்ற அவரது வரிகள்.

"ஊரை உலகை உழைப்பு உயர்த்தும், உழைப்பவனை அது உயர்த்துகிறதா?" என்றவர், தாயின் மணிக்கொடி தயாரிப்பதற்காக, இடுப்புத் துணியும் இவர்கள் இழந்தனர் என்றார். இந்திய தேசத்தின் ஆதிக்கத்தை நோக்கித் தொடர்ந்து தனது கவிதைகளில் கேள்வி எழுப்பியவர் தமிழன்பன். ஆகஸ்ட் 15, பவுர்ணமிகளை ஒரு சிலருக்கே பட்டா போட்டுக் கொடுத்த நாளா? என்று கேட்கும் கவிஞர் இந்தியனிடமிருந்து இந்தியாவை விடுதலை செய்ய எழட்டும் இன்னொரு சுதந்திரப் போர் என்கிறார்.

போலியான ஜனநாயகத்தை பொசுக்கவல்ல கவிதைகளை இயற்றுவதில் சளைத்தவர்களல்லர், திராவிட இயக்கக் கவிஞர்கள். சாலை இளந்திரையன், அப்துல் ரகுமான் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ”புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில் போலி நளன்களின் கூட்டம், கையில் மாலையுடன் குருட்டுத் தமயந்தி” என்று வேட்பாளர்களையும், வாக்காளர்களையும் உருவகப்படுத்தி எழுதியவர் கவிக்கோ. “கள்ள வாக்குகளால் ஜனநாயகத்தைக் கற்பழிக்கும் பதவிக் காமம்தான் தேசபக்தி என்றால் ஒப்புக் கொள்கிறேன் அந்தத் தேச பக்தியில்லாக் குற்றவாளி நான்” என்கிறார் தமிழன்பன்.

கடவுள் / மத மறுப்பைத் தனது கவிதைகள் நெடுக வலியுறுத்தியவர் தமிழன்பன். சாதிக் கலவரங்களில் எரியும் மானுடம் என்று சாதியைச் சாடுவதிலும் சரி, இறைவனைத் தேட மார்க்கங்கள் என்றால், மனிதனைத் தேட என்ன மார்க்கம் என்றபோதிலும் சரி, தமிழன்பனின் கவிதைகளில் திராவிட இயக்கக் கொள்கைகள் மிளிரும்.

ஈழத்தில் நடைபெற்ற கொடூரங்களை தனது என் அருமை ஈழமே என்னும் நூலில் உள்ள கவிதைகளின் வழியாகக் காட்சிப்படுத்தியவர் கவிஞர் தமிழன்பன். யாழ் நூலகம் எரிக்கப்பட்டதைக் குறித்துப் பாடும்போது, ”தை மாதத்தை இழந்திருந்த தமிழாண்டு போலவும், தமிழாண்டு இழந்திருந்த தமிழரைப் போலவும் இருந்தது யாழ்ப்பாணம்” என்கிறார். உலக நாடுகள் ஈழப் படுகொலைகளைக் கண்டு மௌனித்து இருந்ததை, ”பார்வை செத்த உலகுக்கும் ஏழை நாடுகளுக்குப் பாடைகள் தயாரிக்கும் ஐ. நா. சபைக்கும், ஈழமே! உனது பூமியில் என்ன நடக்கிறது என்பது தெரியவே தெரியாதா? என்கிறார். அதே நேரம், “கொலைவெறிச் சிங்களர்களால் வெலிக்கடைச் சிறையில் பிடுங்கப்பட்ட குட்டிமணி ஜெகன் கண்கள், ஈழமே! உனது வெற்றி முகத்தில் பூப்பது நியாய நிச்சயம்; அந்தக் கண்களிலிருந்து உனக்குப் புதிய வாழ்க்கையைப் புதிய வசந்தத்தை நியமனம் செய்வது அறத்தின் நிச்சயம்” என்ற ஈழம் குறித்த நம்பிக்கையையும் தனது கவிதைகளில் விதைக்கிறார் கவிஞர்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைந்து விட்டாலும் அவரது கவிதைகள் மூலம் தமிழர் நெஞ்சில் நீங்கா நினைவுகளை அவர் பெற்றிருப்பார் என்பது உறுதி. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian